RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 269 | செப்டம்பர்.30 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, செப்.30-

ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை: திமுக ஆட்சிக்கு வந்தால் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.2,500 கொள்முதல் விலை வழங்கப்படும் என்று கூறி ஆட்சிக்கு வந்த மு.க.ஸ்டாலின், 2021ம் ஆண்டில் வழங்கியிருக்க வேண்டிய ரூ.2,500 விலையை நான்கரை ஆண்டுகள் கழித்து இப்போது தான் வழங்கியிருக்கிறார்.



உண்மையில் 2021ம் ஆண்டில் நடைமுறையில் இருந்த கொள்முதல் விலையைவிட திமுக வாக்குறுதி அளித்த கொள்முதல் விலை 32.42 சதவீதம் அதிகமாகும். அதே அளவீட்டை கொண்டு பார்த்தால் தற்போது ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.3,311 வழங்க வேண்டும். ஆனால், அதைவிட ரூ.811 குறைவாக கொடுத்து விட்டு, நெல்லுக்கு அதிக விலை கொடுத்து விட்டதாக முதல்வர் ஸ்டாலின் தற்பெருமை பேசிக் கொண்டிருக்கிறார்.

தமிழக அரசால் தற்போது குவிண்டால் ரூ.2,500க்கு கொள்முதல் செய்யப்படும் சாதாரண ரக நெல்லுக்கு மத்திய அரசு ரூ.2,369 விலை வழங்குகிறது. அத்துடன் தமிழக அரசு ரூ.131 மட்டும் ஊக்கத்தொகையாக வழங்குகிறது. ஒடிசா அரசு ஒரு குவிண்டாலுக்கு ரூ.800, ஆந்திரம் மற்றும் தெலங்கானா ரூ.500 வீதம் ஊக்கத் தொகை வழங்குகின்றன.

அதேநேரத்தில், நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல் 40 கிலோ மூட்டைக்கு ரூ.60 வீதம் லஞ்சம் வாங்கும் பணியாளர்கள், மூட்டைக்கு 2 கிலோ நெல்லை குறைத்து கணக்கு காட்டுகின்றனர். விவசாயிகளுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும். அதே போல, தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் நெல்லில் குறைந்தது 80 சதவீதத்தை அரசே கொள்முதல் செய்ய வேண்டும். கொள்முதல் நிலையங்களில் ஊழலை ஒழிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கரூர் சம்பவம்: ஹேமமாலினி எம்.பி. தலைமையில் ஆய்வுக் குழு அமைத்தது பாஜக

புதுடெல்லி: செப்.30-

கரூரில் தவெக தலைவர் விஜய்யின் பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்துள்ள நிலையில், சம்பவம் குறித்து ஆராயவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களை சந்திக்கவும் 8 பேர் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் குழுவை பாஜக தேசிய தலைவர் ஜெ.பி. நட்டா அறிவித்துள்ளார். ஹேமமாலினி எம்பி தலைமையில் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாக பாஜக தேசிய பொதுச் செயலாளர் அருண் சிங் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கரூரில் நடைபெற்ற தவெக கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு பாஜக தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.



மேலும், கூட்ட நெரிசலுக்கு வழிவகுத்த சூழ்நிலை குறித்து ஆராய்ந்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து விரைவாக அறிக்கை அளிப்பதற்காக 8 பேர் கொண்ட ஒரு குழுவை ஜெ.பி.நட்டா அறிவித்துள்ளார். தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த இக்குழு, விரைவில் கரூருக்கு வருகை தரும்.

குழுவின் ஒருங்கிணைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமமாலினி இருப்பார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுராக் தாக்கூர், தேஜஸ்வி சூர்யா, பிரஜ் லால் (முன்னாள் டிஜிபி), ஸ்ரீகாந்த் ஷிண்டே (சிவ சேனா), அப்ரஜிதா சாரங்கி, ரேகா ஷர்மா, புட்ட மகேஷ் குமார் (தெலுங்கு தேசம் கட்சி) ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 20 ரயில் நிலையங்களில் நவீன சிக்னல் முறை அமைக்க ரூ.230 கோடி: ரயில்வே வாரியம் ஒதுக்கீடு

சென்னை, செப்.30-

சென்னை, சேலம் கோட்டங்களுக்கு உட்பட்ட 20 ரயில் நிலையங்களில் 'எலெக்ட்ரானிக் இன்ட்டர் லாக்கிங்' என்ற நவீன சிக்னல் முறையை செயல்படுத்த ரயில்வே வாரியம் ரூ.230 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. தெற்கு ரயில்வேயில் உள்ள முக்கிய வழித்தடங்களில் ரயில்களின் வேகத்தை அதிகரிக்கவும், பாதுகாப்பாக இயக்கவும் ரயில்வே நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. தண்டவாளம், சிக்னல் முறைகளை மேம்படுத்துவது உட்பட பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.



அதன் ஒரு பகுதியாக 'எலெக்ட்ரானிக் இன்ட்டர் லாக்கிங்' என்ற நவீன சிக்னல் முறையை செயல்படுத்த ரயில்வே வாரியம் அனுமதி அளித்துள்ளது. இதுகுறித்து தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: 'எலெக்ட்ரானிக் இன்ட்டர் லாக்கிங்' என்பது ரயில்களை பாதுகாப்பாக இயக்க ரயில்வே கையாளும் இயந்திர தொழில்நுட்ப கட்டமைப்பு ஆகும்.

இது இயந்திரவியல், மின்சாரவியல் தொடர்புடையது. ஒரு தடத்தின் வழியாக ரயிலை உள்ளே வரவழைக்கவோ, அனுப்பவோ தேவைப்படும் பாயின்ட்கள், ரயில் செல்வதற்கு ஏற்ப பூட்டப்பட்டு, ரயில்களை பாதுகாப்பாக அனுமதிக்கும் 'சிக்னல் முறையே' இன்ட்டர் லாக்கிங் என அழைக்கப்படுகிறது.

இதில் பல வகைகள் உள்ளன. ரயில்களின் வேகத்தை அதிகரிக்கும் போது, அதற்கு ஏற்ப இந்த இன்ட்டர் லாக்கிங் தரமும் உயர்த்தப்படுகிறது. சென்னை கோட்டத்தில் காட்பாடி ஜோலார்பேட்டை இடையே உள்ள காட்பாடி சந்திப்பு, லத்தேரி, காவனூர், குடியாத்தம், வளத்தூர், மேல்பட்டி, பச்சக்குப்பம், ஆம்பூர், விண்ணமங்கலம், வாணியம்பாடி, கேட்டாண்டபட்டி ஆகிய 11 ரயில் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் எலெக்ட்ரானிக் இன்ட்டர் லாக்கிங் தொழில்நுட்பம் கொண்ட அதிநவீன சிக்னல் திட்டம் செயல்படுத்த ரூ.135.65 கோடியும், சேலம் கோட்டத்துக்கு உட்பட்ட சாமல்பட்டி, டேனிஷ்பேட்டை, கருப்பூர், வீரபாண்டி சாலை, மகுடஞ்சாவடி, சங்ககிரி உள்ளிட்ட 9 ரயில் நிலையங்களில் இதை செயல்படுத்த ரூ.108.81 கோடியும் தேவை என ரயில்வேக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதற்கிடையே, ரயில்வே வாரியம் இந்த 2 திட்டப் பணிகளுக்கு ரூ.230.06 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. நவீன சிக்னல் தொழில்நுட்பத்தை செயல்படுத்தும்போது, ரயில்களின் வேகமும் அதிகரிக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 'இறப்பின் வலியை சிறுவயதிலேயே உணர்ந்த ஒருவனாக...' கரூர் துயரம் குறித்து ஆதவ் அர்ஜூனா கருத்து

சென்னை, செப்.30-

"கரூரில் இறந்தவர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அண்ணனாக, தம்பியாக, மகனாக, அந்த குடும்பங்களின் கனவுகளையும், நம்பிக்கையையும் சுமந்து செல்லும் ஒரு உறவாகவே எனது வாழ்க்கை பயணம் இருக்கும் என்பதை, இறப்பின் வலியை சிறுவயதிலேயே உணர்ந்த ஒருவனாக உறுதியுடன் கூறுகிறேன்." என தவெக பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூனா தெரிவித்துள்ளார்.

பலி 41 ஆனது...கரூர் வேலுசாமிபுரத்தில் நேற்று முன்தினம் நடந்த தவெக பிரச்சாரக் கூட்டத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 39 பேர் உயிரிழந்தனர். 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதில் கரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் சிசிச்சையில் இருந்த கரூர் தொழிற்பேட்டையை சேர்ந்த கவின் (34) சிகிச்சை பலனின்றி மரணமடைந்ததால் உயிரிழந்தவர் எண்ணிக்கை 40ஆக நேற்று அதிகரித்தது. இந்நிலையில் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த சுகுணா (65) சிகிச்சை பலனின்றி இன்று (செப். 29ம் தேதி) அதிகாலை மரணமடைந்தார். இதனால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 41ஆக அதிகரித்துள்ளது.



மவுனம் கலைத்த ஆதவ் அர்ஜூனா இந்நிலையில், கரூர் சம்பவம் குறித்து தவெக பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூனா மவுனம் கலைத்துள்ளார். தனது எக்ஸ் பக்கத்தில் அவர் பகிர்ந்த பதிவில், "என் வாழ்வின் மிகப்பெரிய துக்கத்தைக் கடந்த இருபத்தி நான்கு மணிநேரமாக அனுபவித்து வருகிறேன்ஞ் இந்த மரணங்கள் என் நெஞ்சை இன்னும் உலுக்கிக் கொண்டு உள்ளது.

மரணத்தின் வலியையும், அந்த மக்களின் அழுகுரலையும் கடந்து செல்ல வழியின்றி தவித்துவருகிறேன். ஒரு மரணத்தின் வலியை ஐந்து வயது சிறுவனாக எனது தாயின் தற்கொலையில் பார்த்தபோதே உணர்ந்தவன். அந்த வலியை இப்போது எனக்கு மீண்டும் ஏற்படுத்தியுள்ளது இந்த மரணங்கள்.

இந்த நிமிடம் வரை இந்த துயர நிகழ்வைக் கடந்து செல்ல முடியாமலும், உறவுகளை இழந்து தவிக்கின்ற அந்த குடும்பங்களின் தவிப்புமே என்னை மீளாத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பு இந்த மரணங்கள். அந்த குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பும், வலியும் சராசரி மனிதனாகக் கடந்து செல்லும் மனநிலையில் என் மனம் இப்போது இல்லை.

இறந்தவர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அண்ணனாக, தம்பியாக, மகனாக, அந்த குடும்பங்களின் கனவுகளையும், நம்பிக்கையையும் சுமந்து செல்லும் ஒரு உறவாகவே எனது வாழ்க்கை பயணம் இருக்கும் என்பதை, இறப்பின் வலியை சிறுவயதிலேயே உணர்ந்த ஒருவனாக உறுதியுடன் கூறுகிறேன்.

துயரமும், துக்கமும் மட்டுமே என் மனதைச் சூழ்ந்திருக்கும் இவ்வேளையில், இழப்புகளைச் சந்தித்த என் உறவுகளுக்கு ஒரு உறவாய் என் எண்ணங்களை பகிர்ந்துகொண்டுள்ளேன். 'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் இறுதியில் தர்மமே வெல்லும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

கரூர் கூட்ட நெரிசல் பின்னணியில் சதி இருக்கலாம் என்று தவெக சந்தேகம் எழுப்பியுள்ள நிலையில், ஆதவ் அர்ஜூனா தனது எக்ஸ் பதிவில், தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் இறுதியில் தர்மமே வெல்லும்!" என்று குறிப்பிட்டுள்ளது கவனம் பெறுகிறது.

## ஆயுத பூஜையை முன்னிட்டு சிங்கம்புணரியில் பொரி தயாரிக்கும் பணி தீவிரம்

சிங்கம்புணரி, செப்.30-

சிங்கம்புணரி பகுதியில் ஆயுத பூஜையை முன்னிட்டு பொரி தயாரிக்கும் பணியில் ஒரு மாதத்திற்கும் மேலாக ஏராளமான தொழி லாளர்கள் மும்மரமாக ஈடுபட்டு வருகின்றனர்.தீபாவாளி என்றால் பட்டாசு என்பது போல் ஆயுத பூஜை உள்ளிட்ட வழிபாட்டுக்கு அவல் பொரி, முக்கியமானதாக உள்ளது. மதுரை திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் பொரிக்கப்படும் பொறி அதிகம் உப்புச் சுவையுடனும் சிங்கம்புணரி தயாரிக்கும் பொரி இனிப்புச் சுவையுடன் இருப்பதால் சிங்கம்புணரி பொரிக்கு என்று தனி மவுசு உள்ளது.

சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் விரும்பி சாப்பிடும் பொருளாக பொரி உள்ளது. நகர்ப்புற கிராமப்புறங்களில் பொரிக்கு என்று தனி வாடிக்கையாளர்கள் உண்டு. இனிப்பு பொரி, காரப்பொரி, மசாலா பொரி, பொரி உருண்டை என பல்வேறு விதங்களில், பொரியை மக்கள் விரும்பி சாப்பிடுகின்றனர். குறிப்பாக செப்டம்பர் முதல் டிசம்பர் வரை மழை காலம் உள்ளதால் பொரி விற்பனையும் இந்த காலக்கட்டத்தில் அதிகமாக உள்ளது.

மேலும் கோயில் விசேஷங்கள் விநாயகர் சதுர்த்தி, ஆயுத பூஜை உள்ளிட்ட பண்டிகை நாட்களில் மக்கள் அதிக அளவில் பொரிகளை வாங்கி செல்கின்றனர். பொரி தயாரிப்பதற்கு நீளமான நெல் ரகம் தேர்வு செய்யப்பட்டு ஏழு நாட்கள் பக்குவப்படுத்தி பொரி தயாரிக்கப்பட்டு வருகிறது.

சிங்கம்புணரியில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை 15க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தலைமுறை தலைமுறையாக பொரி தயாரிப்பு பணியில் ஈடுபட்டு வந்தனர். தற்போது நவீன உணவு பழக்கம் வந்ததால் பொரி சாப்பிடும் பழக்கம் வெகுவாக குறைந்தது. முன்பு கிராமங்களில் நடைபெறும் சந்தைகளில் அதிக அளவில் கிராம மக்கள் பொரி வாங்கி செல்வது வாடிக்கையாக இருந்தது. தற்போது விற்பனை குறைந்துள்ளதால் பொரி தயாரிக்கும் தொழிலாளர்கள் மாற்று தொழிலை தேடி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.



பொரி தயாரிப்பதற்கு அதிக காலம் எடுத்துக் கொள்வதால் நெல்விலை உயர்வு, கூலி உயர்வு ஆகிய காரணங்களால் பொரி தயாரிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. முன்பு கடலை கூடு (பொட்டு ) அடுப்புகளில் பொரி பொறிக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்ப ப்பட்டது. தற்பொழுது இயந்திரங்கள் மூலமாக பொரி பொறிக்கப்பட்டு விற்பனைக்கு செல்கிறது.

இதுகுறித்து பொறி உற்பத்தியாளர் குழந்தைவேல் கூறும்போது, பொரி தயாரிப்பதற்கு பழைய நெல் வகைகளான பவானி, கார், வையகுண்டான் பயன்படுத்தி வந்தோம். தற்போது கோ 43, ஐஆர் 20. கர்நாடகா 64. உள்ளிட்ட நீளமான நெல் ரகங்கள் தேர்வு செய்யப்பட்டு அவற்றை பக்குவப்படுத்தப்படும்.

முதலாவதாக நெல்லை சுடு தண்ணீர் ஒரு நாள் முழுவதும் ஊற வைத்து அவற்றை எடுத்து மறுநாள் ஈரத்தை போக்கும் வகையில் சூடு படுத்தப்பட்டு களத்தில் உலர்த்தப்படும். அதன் பின்பு நெல் அரிசியாக மாற்றப்படும். பின்பு அரிசி மீண்டும் உப்பு மற்றும் இனிப்பு கலந்த தண்ணீரில் வைக்கப்பட்டு இரண்டு நாட்கள் பிறகு அரிசியில் உள்ள தண்ணீர் உலர்த்தப்படும்.

அதன்பின்பு நான்காவது நாள் சீனித் தண்ணீரில் அரிசி ஊறவைத்து பின்பு அதை காய வைத்து மீண்டும் பக்குவப்படுத்தி அவை பொரியாக மாற்றப்படுகிறது. இவ்வாறு நெல் பொரியாக மாறுவதற்கு ஏழு நாட்கள் உழைப்பு ஆகிறது.

முன்பு பொட்டு அடுப்புகளில் பொரி பொறிக்க அதிகளவில் ஆட்கள் தேவைப்பட்டது. தற்போது நவீன இயந்திரங்கள் மூலம் பொரி பொறிப்பதால் குறைந்த ஆட்கள் அதிக அளவில் பொரி தயாரிக்க முடிகிறது. மேலும் மேற்கு வங்கம் பகுதியிலிருந்து பொரிக்கு பக்குவப்படுத்தப்பட்ட நெல் அரிசியாக வருவதால் நான்கு நாட்கள் பக்குவப்படுத்தலிலேயே பொரியாக மாற்ற முடிகிறது.

திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட ஊர்களில் தயாரிக்கப்படும் பொரியானது உப்பு சுவை அதிகமாக இருக்கும். ஆனால் சிங்கம்புணரியில் தயாரிக்கப்படும் பொரி இனிப்பு சுவையுடன் இருப்பதால் பல்வேறு ஊர்களில் இருந்து சிங்கம்புணரி பொரியை வாங்குவதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது கூலி ஆட்கள் பற்றாக்குறை பொரிக்கான தேவை குறைவு ஆகியவற்றின் காரணமாக பொரி தயாரிக்கும் பணி குறைந்துள்ளது.

ஆயுத பூஜை வர உள்ளதால் பொரிக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால் வெளி மாவட்டங்களில் இருந்து ஏராளமான வியாபாரிகள் ஆர்டர்கள் கொடுக்க தொடங்கியுள்ளனர். ஒரு மூட்டை பொரி 120 லிட்டர் வீதத்தில் மூட்டையாக விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இதனால் வியாபாரிகள் பொரிகளை வாங்க சிங்கம்புணரிக்கு அதிக அளவில் வருகின்றனர்'' என அவர் தெரிவித்தார்.

முன்பு திருச்செந்தூர், பழனி, மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் உள்ளிட்ட திருத்தலங்களில் சிங்கம்புணரி பொரி கிடைக்கும் என விளம்பர ப்படுத்தி வைத்திருந்தனர். அந்த அளவிற்கு சிங்கம்புணரி பொரிக்கு ஒரு தனி சிறப்பு உள்ளது.

# பெருங்களத்தூரில் நிரிவி கல்லூரியில் ஸ்ரீ ஹயக்ரீவர் செஸ் அகாடமி சார்பில் மாநில அளவிலான சதுரங்க போட்டி நடைபெற்றது




பெருங்களத்தூர், செப்.30-

செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூரில் உள்ள நிரிவி கல்லூரியில் 29.09.2025 அன்று ஸ்ரீ ஹயக்ரீவர் செஸ் அகாடமி சார்பில் மாநில அளவிலான சதுரங்க போட்டிகள் ஸ்ரீ ஹயக்ரீவர் அகாடமியின் செயலாளர் கோகிலா ராஜேஷ் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் எட்டு வயது பத்து வயது 13 வயது மற்றும் 25 வயதுக்கு உட்பட்டோ ருக்கான போட்டிகள் தல ஆறு சுற்றுகளாக நடைபெற்றன. தமிழகத்தின் செங்கல்பட்டு காஞ்சிபுரம் திருவள்ளூர் சென்னை திருவாரூர் கடலூர் வேலூர் இராணிப் பேட்டை என அனைத்து மாவட்டங்களிலும் இருந்தும் சுமார் 250 மாணவர்கள் இதில் பங்கு பெற்று விளையாடி அசத்தினர். இதில் கலந்து கொண்ட எட்டு வயது உட்பட்ட அனைவருக்கும் வெற்றிப் பதக்கங்கள் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக வழங்கப்பட்டது.

மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தாம்பரம் ஆயுதப்படை உதவி ஆணையாளர் ராதாகிருஷ்ணன் செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழகத்தின் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஜி கே எம் கல்லூரியின் முதல்வர் டாக்டர் புவனேஸ்வரி ஜி.கே.எம் கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் வெங்கடேசன் ஸ்ரீ ஹயக்ரீவர் அகாடமியின் செயலாளர் கோகிலா ராஜேஷ்

ஆகியோர் வெற்றி பெற்று முதல் 30 இடங்களை பிடித்த மாணவ மாணவிகள் சுமார் 160 பேருக்கு வெற்றிக் கோப்பை களையும் பதக்கங்களையும் வழங்கி னார்கள்.

இந்த போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் போட்டியாளர்களுக்கு என போக்குவரத்து வசதி செங்கல்பட்டு தாம்பரம் போன்ற பகுதிகளில் கல்லூரியின் சார்பில் செய்யப்பட்டிருந்தது

மேலும் இவ்விழாவில் பெற்றோர்கள், மாணவர்கள், கல்லூரி நிர்வாகிகள் ,மாவட்ட சதுரங்க கழக நிர்வாகிகள் என சுமார் 700க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இந்த விழாவை சிறப்பித்தனர்.

இதில் மண்ணிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கெஜலட்சுமி சண்முகம் அவர்களின் பேரனும் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.கார்த்திக் அவர்களின் மகன் ரித்திக் கலந்து கொண்டு விளையாடி ஏழாவது இடத்தை பிடித்தனர் இவருக்கு மெடல் சான்றிதழ் கோப்பை வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டனர்

# தமுமுகவின் 31 வது ஆண்டு தொடக்கவிழா முன்னிட்டு தமுமுக புதிய அலுவலகம் பன்னூல் ஆசிரியர் எம் ஆர் எம் அப்துல் ரஹீம் தமுமுக பி. அப்துல் ரஹீம் நூலகம் திறப்பு விழா




தொண்டி, செப்.30-

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே தொண்டியில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் 31 வது ஆண்டு துவக்க நிகழ்வை முன்னிட்டு ராமநாதபுரம் கிழக்கு மாவட்டம் தொண்டி பேரூர் சார்பாக புதிய தமுமுக அலுவலகம் பன்னூல் ஆசிரியர் எம் ஆர் எம் அப்துல் ரஹீம் தமுமுக முன்னாள் மாநில செயலாளர் பி அப்துல் ரஹிம் ஆகியோரது நினைவாக படிப்பகம் துவக்க நிகழ்வும் மனிதம் காக்கும் பணிகள் செய்த இந்து முஸ்லிம் கிறிஸ்தவ சகோதரர்களுக்கு நினைவு பரிசு வழங்கும் நிகழ்வு அன்பாலாய உண்டு உறைவிட பள்ளிக்கு இனிப்பு மற்றும் உணவு வழங்கு விழா தொண்டி பேரூர் சார்பில் நடைபெற்றது.

விழாவில் மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ஜிப்ரி தலைமையில் வகித்தார். கிரா அத் ஆலிம் முகம்மது காசிம் ஓதினார் தொண்டி பேரூர் தலைவர் காதர் வரவேற்புரை நிகழ்த்தினார். தொண்டி ஐக்கிய ஜமாத் செயலாளர் பாருக் ஹாஜியார் கௌரவத் ஆலோசகர் பரகத் அலி, வட்டார ஐக்கிய ஜமாத் தலைவர் அயுப்கான் செயலாளர் விஏஓ ஃபாருக், தொண்டி தெற்கு தெரு ஜமாத் தலைவர் நிர்வாகிகள் வடக்கு தெரு ஜமாத் நிர்வாகிகள் கிழக்கு தெரு ஜமாத் நிர்வாகிகள் ஓடாவி தெரு ஜமாத் நிர்வாகிகள் மரைக்காயர் தெரு ஜமாத் நிர்வாகிகள் லெப்பை சாகிப் தெரு ஜமாத் நிர்வாககிகள் மரைக்காயர் தெரு நிர்வாகிகள் எம்.ஆர். பட்டனம் ஜமாத் நிர்வாகிகள் பி.வி. பட்டனம் ஜமாத் நிர்வாகிகள் தொண்டி இந்து தர்ம பரிபாலன சபை நிர்வாகிகள் கிறிஸ்தவ சபை நிர்வாகிகள்

தமுமுக மமக மாவட்ட பேரூர் நிர்வாகிகள், திமுக நகர் செயலாளர் இஸ்மத் நானா, காங்கிரஸ் நகர் தலைவர் காத்தார் ராஜா, விடுதலை சிறுத்தைகள் முருகன், ராதாகிருஷ்ணன் பெரிய பள்ளி வாசல் ஜமாத் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் அலுவலகம் மற்றும் பன்னூல் ஆசிரியர் எஸ்ஆர்எம் அப்துல் ரஹீம் மற்றும தமுமுக பி அப்துர் ரஹீம் நினைவு படிப்பகத்தை மனிதநேய மக்கள் கட்சியின் துணை பொதுச்செயலாளர் தாம்பரம் யாகூப் தாம்பரம் மாமன்ற உறுப்பினர் மற்றும் தமுமுக மாநில தலைமை பிரதிநிதி மண்டலம் ஜெயினுலாபுதீன் ஆகியோர் திறந்து வைத்தனர். விழாவில் தொண்டி ஐக்கிய ஜமாத்தின் கௌரவ தலைவர் பொறியாளர் அபூபக்கர் இந்து தர்ம பரிபாலன சபை கௌரவத் தலைவர் பாலசுப்பிரமணியன் ராஜா கிறிஸ்துவ பங்குத்தந்தை தமுமுக மாவட்ட செயலாளர் பொறியாளர் ஜாவித் அசாம் மாவட்ட பொருளாளர் பனைக்குளம் அசன், தொண்டி பேரூர் கவுன்சிலர் பெரியசாமி, சமீமா பானு, செரிபா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மனித நேய மக்கள் கட்சி மாநில துணைப் பொதுச் செயலாளர் தாம்பரம் எம் யாகூப் தமுமுக மாநிலச் செயலாளர் தொண்டி சாதிக் பாட்சா தமுமுக தலைமை பிரதி நிதி மண்டலம் ஜைனுல் ஆபிதின் .கலந்துகொண்டு படிப்பகத்தை திறந்து வைத்தும் தொண்டி அன்பாலயா சிறுவர் உண்டு உறைவிட பள்ளி குழந்தைகளுக்கு இனிப்புகள் உணவுகள் வழங்கி சிறப்புரையாற்றினர். தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் 31 ஆண்டு சேவைகள் பற்றி பேசினர். விழாவில் தமுமுகவின் தொண்டி பேரூர் தமுமுக மூத்த உறுப்பினர்களான முகமது ரபீக் , முகமது நிஷார் , அப்துல் ரஹீம், அப்துல் ரசாக் , கலீல் ரகுமான் , அஜிஸ் ரகுமான் , பந்தே நவாஸ் ஆகியோருக்கு தன்னலமற்ற தொண்டர் விருதும் இந்து முஸ்லிம் கிறிஸ் தவர்கள் தொண்டியில் ஊரின் வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் தொடர்ந்து பணி செய்து கொண்டிருக்கும் தொண்டி ஐக்கிய ஜமாத் இந்து தர்ம பரிபாலன சபை கிறிஸ்தவ சபை நிர்வாகிகளுக்கு மனித ஒற்றுமை விருது வழங்கி கௌரவப்படுத்தப்பட்டது. ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை முகமது மைதீன் பேரூர் துணைத் தலைவர் அலாவுதீன்மமக பேரூர் செயலாளர் பரகத் அலி பேரூர் பொருளாளர் அம்மாது சேகு மற்றும் தொண்டி பேரூர் பகுதி நிர்வாகிகள் ஜலால் அப்துல்லாஹ் சலீம் ரியாஸ் கல்யாணம் ராஜா ராம் பெரியசாமி ஆகியோர் செய்திருந்தனர்.

பேரூர் பரக்கத் அலி நன்றி கூறினார்.



# பழனி அருகே ஒரு தலை பட்சமாக பட்டா வழங்கக் கூடாது, அனைவருக்கும் பட்டா வழங்க வேண்டும் எனக் கூறி வட்டாட்சியரிடம் பொதுமக்கள் மனு

திண்டுக்கல், செப்.30-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள பால சமுத்திரம் பேரூராட்சி, வண்டி பாதை என்னும் இடத்தில் சாலை ஓரங்களில் 40 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருவதாகவும் ஒரு சிலருக்கு மட்டும் பட்டா வழங்கப் போவதாக பொதுமக்கள் புகார் கூறி வருகின்றனர். இதில் குடியிருக்கும் அனைத்து நபர்களுக்கும் பட்டா வேண்டி பழனி வட்டாட்சியரிடம் மனு கொடுத்தனர். முன்னதாக இப்பகுதியில் நிலங்களை அளக்கப்பட்டு பட்டா வழங்கப்படும் என கூறிவ ந்த நிலையில், அப்பகுதி திமுக கவுன்சிலருக்கு வேண்டிய ஏழு நபர்க ளுக்கு மட்டுமே பட்டா வழங்க தீர்மானித்துள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். எனவே அப்பகுதியில் வசிக்கும் பதினாறு குடும்பங்களுக்கும் பட்டா வழங்க வேண்டும். குறிப்பாக அப்பகுதியில் இரு கண்கள் பார்வை இழந்து கூலி வேலை செய்து வரும் மாற்றுத் திறனாளி வசித்து வருகின்றனர். அவருக்கும் பட்டா வழக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் பழனி வட்டாட்சியரிடம் மனு கொடுத்தனர். இதில் 20 க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் ஆண்கள் என அனைவரும் கலந்து கொண்டு மனு கொடுத்தனர்.



# மாபெரும் கபடி போட்டி ஓபன் மேட்ச் நடைபெற்றது

சிவகங்கை, செப்.30-

சிவகங்கை அரண்மனைக்குள் தமிழர்களின் வீர விளையாட்டு சேர்ந்த கபடி போட்டி சிறப்பாக நடைபெற்றது இவ்விழாவினை சிவகங்கை ராணி மற்றும் துரை நடத்தினார்கள் இந்த கபடி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசு 25,001 2 ஆம் பரிசு 15, 001 வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டது ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டு துடிப்புடனும் வெளிச்சீடனும் சிறப்பாக விளையாடினர் இந்த மாபெரும் கபடி போட்டியை நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்களித்தனர் பொதுமக்கள் அனைவரும் கண்டு களித்து சென்றனர்



# தனிநபர் ஆக்கிரமிப்பு அகற்றக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்த கிராம பொதுமக்கள்

சிவகங்கை, செப்.30-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் வட்டம் எம்.வேளாண்குளம் குரூப் கில்லுக்குடி கிராமத்தில் வசிக்கும் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனு குறித்தாவது இந்தப் பகுதியில் 20 குடும்பங்கள் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வசித்து வருகிறோம் கலந்த நாள் வருடமாக அழகர்சாமி மகன் பத்மநாபன் என்பவர் மட்டும் கிராமத்திற்கு எதிர்ப்பாக பாதையை மறைப்பது கண்மாய் கழுங்கை அடைத்து வைப்பது கேட்கப் போனால் வெளி நபர்களை அழைத்து வந்து அடிப்பது கொலை மிரட்டல் விடுவது என எல்லாவிதமான சம்பவங்களையும் செய்து வருகிறார் ஆட்சியரிடமும் ஏற்கனவே மனு கொடுத்து ப்ளீஸ் கமிட்டி நடத்தப்பட்ட முறையிலும் எந்தவித மாற்றமும் இல்லை கடந்த 26/ 3/2025 சமாதான கூட்டம் வட்டாட்சியர் முன்பு சமாதான கூட்டம் நடத்தப்பட்டது அதற்கும் எந்த பதிலும் கிடையாது மேலும் பழையபடி பாதையை அடைப்பது கேட்கப் போவர்களை அடிப்பது உதைப்பது போன்ற சம்பவங்கள் செய்து தொடர்ந்து வருகிறார் இதுபோல் வன்முறை சம்பவங்கள் இன்னும் குறைந்தபாடில்லை இது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்து எஃப் ஐ ஆர் தாக்கல் செய்த நிலையிலும் காவல்துறை இன்னும் கைது பண்ணவில்லை என்றும் மாவட்ட ஆட்சியர் முன்பு அளித்த மனுவின் பிறகு அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தனர் மேலும் அந்தப் பகுதியில் மது அருந்திய பாடிய சில சமூக விரோதிகள் நடமாட்டம் இருப்பதாகவும் தெரிவித்தனர் இது குறித்து மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுத்து அந்த பகுதி மக்களுக்கும் எங்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் பாதையினை முறையாக மீட்டு தர வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமானது, வருகின்ற 30.9.2025 அன்று மானாமதுரை, சிப்காட் செவன்த்டே அட்வெண்டிஸ்ட் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளது

சிவகங்கை, செப்.30-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2.8.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் புதிய திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் வாயிலாக தமிழகம் முழுவதும் சுமார் 1,256 உயர்தர மருத்துவ மையங்கள் மூலம் 17 சிறப்பு மருத்துவ துறைகள் வாயிலாக கட்டணமில்லா மருத்துவ சேவைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில், வாரத்திற்கு ஒரு முகாம் வீதம் மொத்தம் 39 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வருகின்ற 30.9.2025 ஆம் தேதியன்று மானா மதுரை, சிப்காட், செவன்த்டே அட்வெண்டிஸ்ட் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமானது நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில், ரூபாய் 3 ஆயிரம் மதிப்பீட்டிலான இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் அனைத்தும், பொதுமக்களுக்கு இலவசமாக மேற்கொள்ளப் படவுள்ளது.

மேலும், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், பல் மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், மனநல மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம், நுரையீரல் நோய் மருத்துவம், பொது மருத்துவம், இருதய மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், தோல் மருத்துவம், சித்த மருத்துவம், இயன்முறை மருத்துவம், அறுவை சிகிச்சை மருத்துவம், மகப்பேறு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுனர்களை கொண்டு, சிறப்பான மருத்துவ சேவைகளும் இம்முகாமின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மருத்துவர்களால் பரிந்துரைக்கப் படுவர்களுக்கு எக்கோ பரிசோதனை (Echocardiogram), எக்ஸ்ரே (X-Ray), அலட்ராசவுண்ட ஸ்கேன் (USG), பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் இம்முகாம்களிலேயே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தாய் சேய் நல ஊட்டச்சத்து பெட்டகங்களும் வழங்கப்படவுள்ளது. அதுமட்டுமன்றி, இம்முகாம்களின் வாயிலாக, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத் திறனாளி களுக்கான மருத்துவ சான்றிதழ்களும் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, முகாமிற்கு வருகைபுரியும் பொதுமக்கள் தங்களின் ஆதார் அட்டையின் நகலினை கொண்டு வருதல் அவசியமாகும். மேலும், இம்முகாமில் காப்பீடு அட்டை வேண்டி விண்ணப்பிப்பவர்கள், குடும்ப அட்டை (Smart Card), ஆதார் அட்டை மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் தங்களது ஆண்டு வருமானம் ரூபாய் 1.20 இலட்சத்துக்கு குறைவாக உள்ளதற்கான சான்று ஆகியவைகளை கொண்டு வருதல் வேண்டும்.

இதுபோன்று, உயிர் காக்கும் தரமான மருத்துவ சேவையினை பொதுமக்களுக்கு வழங்குவதற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டமானது, செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதனை பொதுமக்கள் கருத்தில் கொண்டு, தங்களது பகுதிகளில் நடைபெறவுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமினை பயன்படுத்திக் கொண்டு, தங்களது உடல்நலத்தினை முறையாக பேணிக்காத்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

# சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரை ஆனந்த் அவர்களுக்கு காவல்துறை பாதுகாப்பு வழங்க கோரி மனு



சிவகங்கை, செப்.30-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் மட்டும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் முக்குலத்தோர் வாழ்வுரிமை கட்சி சார்பாக 200க்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சியர் அலுவ லகம் மற்றும் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வந்து சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி எம் துரை ஆனந்த்க்கும் அவர் குடும்பத்தாருக்கும் காவல்துறையால் வழங்கப்படும் துப்பாக்கி ஏந்திய காவலர் பாதுகாப்பு வேண்டுமென மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளித்தனர் அந்த மனுவில் கூறியதாவது துரை ஆனந்த் அவர்களிடம் சிலர் பணம் கேட்டு விரட்டியதாகவும் வழங்கா விட்டால் அவரையும் அவர் குடும்பத்தினரையும் கொலை செய்து விடுவதாகவும் அவர் நடத்திவரும் உணவகத்தை அடித்து நொறுக்கி விடுவதாகவும் மனு ஏற்கனவே 24/ 9 /25 அன்ற புகார் மனு காவல் கண்காணிப்பாளர் அவனிடம் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவே ஜனநாயகத்தின் அடிப்படை மதிப்புகளை கருத்தில் கொண்டு அவருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் அவர்களின் உயிர் மற்றும் வாழ்வுரிமை உறுதி செய்யுமாறு முக்குலத்தோர் வாழ்வுரிமை கட்சியின் சார்பாக மனு அளித்து சென்றனர்.

# சிவகங்கை மாவட்டம்: முதலமைச்சரின் அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் குழந்தைகளின் பாதுகாவலர்கள், தமிழ்நாடு முதலமைச்சருக்குமனம் நெகிழ நன்றி தெரிவித்தனர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாளுக்கு நாள் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து பொதுமக்களை பயன்பெற செய்து வருகிறார்கள். அவ்வாறாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் அனைத்தும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படையாக திகழ்ந்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தற்போது, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் "அன்புக் கரங்கள்" திட்டமானது, கடந்த 15.09.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக, தமிழகம் முழுவதும் 6,052 பெற்றோர்களை இழந்த குழந்தைகள் / பெற்றோர்களில் ஒருவரை இழந்த குழந்தைகள் ஆகியோர் 18 வயது வரையில் மாதம் ரூபாய் 2,000/ அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்படும் வகையில், இத்திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களில், தங்கள் இரண்டு பெற்றோரையும் இழந்து, உறவினர்களின் பாதுகாப்பில் குழந்தைகள் வளர்ந்து வருவதை அறிந்து, அக்குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில்,





அவர்களது பள்ளிப் படிப்பு வரை இடைநிற்றல் இன்றி அவர்கள் கல்வியைத் தொடர, 18 வயது வரை மாதம் ரூபாய் 2,000/ உதவித்தொகை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் "அன்புக் கரங்கள்" திட்டத்தின் கீழ் 144 குழந்தைகளுக்கு மாதம் ரூபாய் 2,000/ அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு, அதற்கான அடையாள அட்டைகளும் அக்குழந்தைகளின் உறவினர்கள் / பாதுகாவலர்கள் வழங்கும் நிகழ்வு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் மேற்கண்ட தினத்தன்று தொடங்கி வைக்கப்பட்டது.







முதலமைச்சரின் அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் பயனடைந்த குழந்தைகளின் பாதுகாவளர் திருமதி. மாரியம்மாள் (வடக்கு சந்தணூர்) அவர்கள் தெரிவிக்கையில்,

என் பெயர் திருமதி. மாரியம்மாள், நான் இளையான்குடி வட்டம், வடக்கு சந்தணூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் எனது



மகள் மற்றும் மறுமகன் ஆகிய இருவரும் விபத்தில் இறந்துவிட்டனர்.

அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். அக்குழந்தைகளான எனது பேரன் மற்றும் பேத்தியை, தாய்வழி பாட்டியான நான் வளர்த்து வருகிறேன். அக்குழந்தைகளை படிக்க வைப்பதில் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். இச்சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அன்புகரங்கள் திட்டம் மூலம் எனது பேரன் பேத்திக்கு மாதம் ரூ.2000/ வழங்குவது எனக்கு மிகவும் பேருதவியாக உள்ளது. அவர்களின் 18 வயது வரை மாதந்தோறும் ரூ.2000/ தொகை இத்திட்டத்தின் வாயிலாக வழங்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

பெற்றோரை இழந்த எனது பேரன் பேத்திக்கும், அவர்களை பராமரித்து வரும் எனக்கும், மாதந்தோறும் பொருளாதார ரீதியாக உதவிடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள். குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு, இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் வாழ்நாள் நன்றி கடன் பட்டுள்ளோம் என குழந்தைகளின் பாதுகாவலர் திருமதி. மாரியம்மாள் அவர்கள் தெரிவித்தார்.

முதலமைச்சரின் அன்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் பயனடைந்த குழந்தைகளின் பாதுகாவளர் திருமதி. ரேவதி (திருப்புவனம்) அவர்கள் தெரிவிக்கையில்,

என்பெயர் திருமதி ரேவதி நான் திருப்புவனம் வட்டம், நயினார் பேட்டை கிராமத்தை சேர்ந்தவர்.

கடந்த 6 மாதங்களுக்கு



முன் எனது கணவரின் தம்பி மற்றும் தம்பியின் மனைவி ஆகிய இருவரும் குடும்ப பிரச்சனையின் காரணமாக இறந்து விட்டனர். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். எனக்கும் 2 குழந்தைகள் உள்ளது.

தற்போது எனது கணவரின் தம்பி குழந்தைகளாகிய மூன்று குழந்தைகளையும் எங்களது அரவணைப்பில் பாதுகாத்து வருகிறோம். எனது இரண்டு குழந்தைகளையும் சேர்த்து மொத்தம் ஐந்து குழந்தைகளையும் படிக்க வைக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தோம். இச்சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்புகரங்கள் திட்டத்தின் மூலம் எனது கணவரின் தம்பி குழந்தைகளான அம்மூன்று குழந்தைகளுக்கும் மாதந்தோறும் ரூ.2000/ வழங்குவது எங்களுக்கு மிகவும் உதவியாக உள்ளது.

குழந்தைகளின் கல்வியானது, எக்காரணத்தைக் கொண்டும் தடையாக கூடாது என்பதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்கள். 18 வயது வரை மாதம் ரூபாய் 2,000/ உதவித்தொகை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கிட வழிவகை ஏற்படுத்தியுள்ளார்கள். பெற்றோர்களை இழந்த அக்குழந்தைகளுக்கு, பெற்றோர்களின் நிலையிலிருந்து அனைத்தையும் செய்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம் என திருமதி. ரேவதி அவர்கள் தெரிவித்தார்.

**தொகுப்பு: மு.ராஜசெல்வன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சிவகங்கை மாவட்டம்.**



■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள்.

## பாய்ஸ் கம்பெனி அருகே ஒய்யாரமாக உலா வந்த காட்டுமாடுகள்

குன்னூர், செப்.30-

நீலகிரி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் தற்போது வன விலங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக காட்டு மாடுகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. இவை மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளுக்குள் வருவதால், அவ்வப்போது மனித விலங்கு மோதல் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று குன்னூர் பகுதியில் குன்னூர்ஊட்டி சாலையில் காட்டுமாடுகள் வலம் வந்தது. இதனால், இவ்வழித்தடத்தில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இவ்வழியாக வாகனங்களில் வந்த சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் காட்டு மாட்டுகளை புகைப்படம் எடுத்து ரசித்தனர். இவ்வாறு சுற்றிதிரிந்த காட்டுமாடுகள் பாய்ஸ் கம்பெனி அருகேயுள்ள வணிக வளாகத்தை ஒட்டி சென்றது. இதனால் பொதுமக்கள் பலர் காட்டுமாடுகளை கண்டு பீதியடைந்தனர். மேலும், குன்னூர் அருகேயுள்ள ஜெயந்தி நகர், அம்பேத்கர் நகர், அண்ணாநகர் போன்ற பகுதிகளில் இதேப்போல் காட்டுமாடு சுற்றி திரிவதாக புகார் எழுந்துள்ளது.

இதனால், இரவு நேரங்களில் பணிகளுக்கு சென்று வரும் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் அச்சமடைந்தனர். எனவே, அப்பகுதியில் உணவு தேடி உலா வரும் காட்டு மாட்டுகளை விரட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள் உள்ளார்.

# உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் கிராவிடாஸ் அறிவுசார் விழாவில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டு

வேலூர், செப்.30-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, உலக அளவில் பெற்ற வேலூர் வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் கிராவிடாஸ்25 அறிவுசார் விழா நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டு, இந்தியா 2047ல் வளர்ந்த நாடு நிலையை எட்டுவதில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி முக்கிய பங்கு வகிக்கிறது என நிதி ஆயோக் இயக்குநர் ஷாசங் ஷா தெரிவித்து சிறப்புரையாற்றினார்.

வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் கிராவிடாஸ் அறிவுசார் விழா செப்டம்பர் 26ம் தேதி தொடங்கியது. இதன் நிறைவு விழா 28.09.2025 ஞாயிற்றுக்கிழமையன்று நிறைவுபெற்றது.

இதில், கவுரவ விருந்தினராக கலந்து கொண்டு நிதி ஆயோக் இயக்குநர் ஷாசங் ஷா கலந்து கொண்டு பேசியதாவது: இந்தியா 2047ல் வளர்ந்த நாடாக உருவாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுமார் 30 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்ட இந்தியா அடுத்த 25 ஆண்டுகளில் 7.5 மடங்கு அளவுக்கு அதிக வளர்ச்சி அடைய வேண்டும். இந்த இலக்கை அடைவதில் உயர்க்கல்வி மற்றும் ஆராய்ச்சி முக்கிய பங்கு வகிக்கும். நாட்டில் 4.5 கோடி மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி படிக்கின்றனர். 1.01 பாலின சமநிலை குறியீட்டில் மாணவர்களை விட அதிகமாக மாணவிகள் உயர்கல்வி பயில்வதைக் காட்டுகிறது. ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பல்கலைக்கழகங்கள் புதுமையை உருவாக்கும் ஆராய்ச்சி மையங்களாக மாற்ற வேண்டும். லண்டன் எகனாமிக்ஸ் அறிக்கையின்படி, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுகிறது.

அடுத்த 25 ஆண்டுகளில், ஆராய்ச்சிக்கான முதலீடு உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 0.7 சதவீதத்தில் இருந்து 3.5 சதவீதமாக உயரும். இது ஆராய்ச்சி முதலீட்டில்




5 மடங்கு அதிகமாகும். இந்த முதலீடு 40 மடங்கு வளர்ச்சியை அதிகரிக்க உதவும்.

பல்கலைக்கழகங்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் இந்த பொது மற்றும் தனியார் துறைகளால் வழங்கப்படும் நிதியை பயன்படுத்தி அபரிமிதமான பங்களிப்பை வழங்க வேண்டும். அமெரிக்காவில் 16 சதவீத மாணவர்கள் பட்டப்படிப்புக்குப்பிறகு தொழில்முனைவோராக மாறுகின்றனர். இங்கிலாந்தில் 5 சதவீதமாக உள்ளது. அதுபோல இந்தியாவிலும் மாணவர்கள் வேலை தேடி செல்லும் நிலையை மாற்றி தொழில்முனைவோராக மாற வேண்டும். அடுத்த 25 ஆண்டுகளில் 100 கோடி இந்தியர்கள் நடுத்தர பிரிவுக்கு மாறுவார்கள். அதில் 60 சதவீதம் பேர் நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர கூடும். பெரிய மக்கள் தொகையை சமாளிக்க பசுமை ஆற்றலில் நிறைய வாய்ப்புகள் உள்ளன. சுகாதார பிரச்சினைகளில் தொற்றா நோய்கள் முக்கிய பிரச்சினையாக இருக்கும். 2047ல் 20 சதவீத மக்கள் தொகை முதியவர்களாவும், 80 கோடி மக்கள் தொற்ற நோய் பாதிப்புகளை எதிர்கொள்வார்கள். மாணவர்களின் புதுமை கண்டுபிடிப்புகளை சுகாதார துறையில் கவனம் செலுத்தி ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல், இணைய பொருள்கள் தொழில்நுட்பங்கள் ஆகியவை மனிதர்களை மையப்படுத்தி இருக்க வேண்டும். இத்துறையில் மாணவர்கள் கவனம் செலுத்திட வேண்டுமென இவ்வாறு பேசினார்.

கர்நாடக மாநிலம் ஹோஸ்கொட்டே எம்எல்ஏவும், கர்நாடக மின்னணுவியல் மேம்பாடு கழகத்தின் தலைவருமான சரத்குமார் பச்சே கவுடா பேசுகையில், "நாட்டின் 10 சதவீதம் பேரிடம் 75 சதவீத செல்வம் குவிந்து கிடக்கிறது. இதில் ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. ஜனநாயகம் என்பது அரசியலுக்கு மட்டுமல்லாமல் கல்வி, வேலைவாய்ப்பு, முதலீடு ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். சமூக அமைப்பில் நிலைத்தன்மை மிகவும் முக்கியமானது. இதில் தொழில்நுட்பம் சம நிலையை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்தியா மின்சார தேவையில் 50 சதவீதத்தை நிலக்கரி, எரிவாயு போன்றவைகளை சார்ந்திருக்கிறது. இந்தியாவில் தரக்குறைவான காற்று மாசு காரணமாக 16 லட்சம் பேர் சுகாதார குறைபாட்டால் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழப்பது தெரியவந்துள்ளது. டெல்லி, மும்பை, பெங்களூரு, சென்னை போன்ற பெரிய நகரங்களில் காற்றின் தரம் மோசமாக உள்ளது. கர்நாடகாவில் எரிசக்தி தேவையில் சுமார் 80 சதவீத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்படுத்தப்படுகிறது.

தொழிலாளர் பங்களிப்பில் 25 சதவீத அளவுக்கு மட்டுமே பெண்கள் உள்ளனர். பெண்கள் பட்டப்படிப்பை அதிகமாக படித்தாலும், வேலைக்கு செல்வது குறைவாக உள்ளது. தமிழ்நாட்டில் வேலைக்கு செல்லும் பெண்களின் எண்ணிக்கை 37 சதவீதமாக உள்ளது. பாலின சமத்துவத்தை அடைய நிறைய முயற்சி செய்ய வேண்டி உள்ளது" என சிறப்புரையாற்றினர்.

விஐடி துணைத் தலைவர் சேகர் விசுவநாதன் பேசுகையில், "பொக்ரான் குண்டு வெடிப்பின் போது பொருளாதார தடை விதிக்கப்பட்டது. அதில் இருந்து மீண்டு பொருளாதார வலிமை மிக்க நாடாக மாறி உள்ளோம். அமெரிக்காவின் நாசா, இந்தியாவுக்கு தொழில் நுட்பங்களை மறுத்தது. இப்போது விண்வெளி தொழில்நு ட்பத்தில் இஸ்ரோ சாதித்து வருகிறது. இந்தியா திறன் மிக்க மாணவர் களை கொண்டுள்ளது. கூகுள், மைக்ரோசாப்ட் ஆகிய பெருநிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரி பொறுப்பில் இந்திய வம்சாவளியினர் உள்ளனர். உலகின் பெரிய பொருளாதார நாடாக மாற மாணவர்களின் பங்களிப்பு முக்கியமானது" என்றார்.

இந்நிகழ்வில் செயல் இயக்குநர் சந்தியா பென்டரெட்டி பேசுகையில், "கிராவிடாஸ் புதுமை படைப்புகளுக்கு ஒரு தளமாக அமைந்துள்ளது. அறிவு திறனை தாண்டி புதுமை யோசனை, கண்டு பிடிப்பு, ஸ்டார்ட் அப் என பன்முக அம்சங்களை கொண்டதாக அமைந்துள்ளது" என்றார்.

மேலும், கிராவிடாஸ் ஹேக்கதான் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று குழுவினருக்கு பரிசு வழங்கி சிறப்பிக்கப்பட்டது. விஜடி துணைத் தலைவர் சங்கர் விசுவநாதன், துணைவேந்தர் காஞ்சனா பாஸ்கரன், இணை துணைவேந்தர் பார்த்த சாரதி மல்லிக், பதிவாளர் ஜெயபாரதி, கிராவிடாஸ் ஒருங்கிணைப்பாளர் ஷர்மிளா ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர்.



## முத்தூர் கிராமத்தில் நாட்டு நலப்பணித் திட்ட முகாம்





காளையார் கோவில், செப்.30-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றிய த்தில் உள்ள முத்தூர் கிராமத்தில் சிவகங்கை புனித சூசையப்பர் மேல்நிலை ப்பள்ளி மாணவர்களின் நாட்டு நலப்பணித் திட்ட முகாம் நடைபெற்றது. ஏழு நாள்கள் நடைபெறும் முகாமின் நான்காம் நாள் நிகழ்வில் பள்ளியின் தலைமை ஆசிரியை அருள்சகோதரி செல்வராணி தலைமை வகித்தார். பள்ளியின் தாளாளர் அருள்சகோதரி அந்துவான் ரோஸ்லின்மேரி அருள்சகோதரி சுபா முன்னிலை வகித்தனர். தமிழ்த்தாய் வாழ்த்து பாட நிகழ்ச்சிகள் தொடங்கியது. நாட்டு நலப்பணித் திட்ட மாணவன் தருண் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி டிஜிட்டல் கல்வி அறிவில் இளைஞர்களின் பங்கு என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் துணைத் தலைவர் ஆரோக்கியமேரி பிரபஞ்ச குறித்தும் கிரகணங்கள் குறித்தும் அதிலுள்ள அறிவியல் உண்மைகளை மக்களிடம் விளக்கிக் கூறினார். நீரின் சிக்கனம் குறித்த மாணவர்களின் விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டது. மரம் வளர்ப்பது குறித்த பாடலுக்கு சிறப்பாக மாணவர்கள் நடனம் ஆடினர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை கிளைத் தலைவர் மணவாளன் கிளைப் பொருளாளர் ராஜா சரவணன் செயற்குழு உறுப்பினர் செல்வம் வானவில் மன்ற கருத்தாளர் நீலாயதாட்சி வாழ்த்துரை வழங்கினர். பொதுமக்களிடம் வினாக்கள் கேட்டு வெற்றி பெற்றவர்களுக்கு புத்தகம் நினைவு பரிசாக வழங்கப்பட்டது. ஊர் பெரியவர் முத்துப்பாண்டி முகாமில் மாணவர்களின் செயல்பாடுகளை சிறப்பாக பாராட்டினார். நாட்டு நலப்பணித் திட்ட மாணவன் ஹரிஹரன் நன்றி கூறினார். நாட்டுப்பண் இசைக்க விழா நிறைவுற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தொலைநோக்கியை கொண்டு ஏற்பாடு செய்திருந்த வான்நோக்கும் நிகழ்வினை பொதுமக்களும் மாணவ மாணவிகளும் கண்டு ரசித்தனர். நாட்டு நலப்பணி திட்ட முகாம் அலுவலர் ஜான்பால் உதவி அலுவலர் டெய்சன்ராஜா விழாவிற்கான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தனர்.





## சவாலே சமாளி நூல் வெளியீட்டு விழா

சிவகங்கை, செப்.30-

எழுத்தாளர் மகா பிரபு மற்றும் 25 எழுத்தாளர்களின் கூட்டு முயற்சியில் உருவான சவாலே சமாளி தொகுப்பு கட்டுரை நூல் வெளியீட்டு விழா கல்லலில் நடைபெற்றது. விழாவிற்கு அழகப்பா அரசு கலைக் கல்லூரி தமிழ் உயராய்வு மைய மேனாள் தலைவர் பேராசிரியர் முனைவர் முருகேசன் தலைமை வகித்தார். அறிவொளி இயக்க மாவட்ட இணை ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம் முன்னிலை வைத்தார். முத்து டான்ஸ் அகாடமி நிறுவனர் கலை சுடர்மணி முனைவர் முத்துமாரி இளஞ்செழியன் மற்றும் காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி வித்யாசாலா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர் செந்தில்குமார் சிறப்பு விருந்தினர்களாக இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவில் மாணவி லக்ஷிகா வரவேற்பு நடனம் ஆடினார். சிவகங்கை வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர் காளிராசா மற்றும் உலகத் திருக்குறள் கூட்டமைப்பு மாநில துணைத் தலைவர் புலவர் மாமணி மெய்யாண்டவர் இணைந்து நூலை வெளியிட கல்லல் வட்டார வளமைய மேற்பார்வையாளர் சங்கீதா மற்றும் கல்லல் சாந்திராணி பதின்ம மேல்நிலைப் பள்ளி துணை முதல்வர் அருட்சகோதரி ரெக்ஸி இணைந்து நூலைப் பெற்றுக் கொண்டனர். அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் கல்லூரி மாணவர் லெனின்குமார் இந்த நூலில் இடம் பெற்றுள்ள 26 கட்டுரைகளுக்கும் மதிப்புரை வழங்கினார். முன்னதாக கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 40 பேருக்கு மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விஸ்ராம் கல்வி அறிவாலயம் சார்பாக கல்லல் பகுதி சமூக சேவகர் ஆறுமுகத்திற்கு மதிப்புமிகு மனிதர் விருது, புலவர் காளிராசாவுக்கு தமிழ்ச் சுடர் விருது, காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி வித்யாசாலா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர் செந்தில்குமார், கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் கற்பகவல்லி, கல்லல் சாந்திராணி மேல்நிலைப்பள்ளி துணை முதல்வர் அருட்சகோதரி ரெக்ஸி ஆகியோருக்கு மதிப்புமிகு ஆசிரியர் விருது வழங்கப்பட்டது.

எழுத்தாளர்கள் புனிதா, தென்றல் மணியன் நூல் குறித்த தங்கள் அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். ஆசிரியர்கள் கண்ணதாசன், முருகன், கார்த்திக், கிருஷ்ணவேணி, அருள் சகோதரி சுனிதா, கவிஞர் கலையரசன், எழுத்தாளர் புனிதா, சிவக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். எழுத்தாளர் நித்யா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். விநாயகமூர்த்தி நன்றியுரை ஆற்றினார். தேசிய கீதத்துடன் விழா நிறைவு பெற்றது.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே கடந்த (28.09.2025) திருப்பூர் மாநகராட்சி, எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெறும் (தொகுதி 2 மற்றும் 2A) தேர்வினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



## வேலூர் ஆட்சியரகத்தில் இந்திய சைகை மொழி மற்றும் சர்வதேச காது கேளாதோர் தின விழா முன்னிட்டு மொழியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு

வேலூர், செப்.30-

வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் விழிப்புணர்வு, இந்திய சைகை மொழி தினம் மற்றும் சர்வதேச காதுகேளாதோர் தினத்தை முன்னிட்டு சைகை மொழியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை அலுவலர் பாபு, துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



## தமிழ்நாடு மருந்து வணிகர் சங்க செயற்குழு கூட்டம் ரத்து : இருதரப்பினரிடையே கோஷ்டி மோதல் போலீஸ் குவிப்பு

மதுரை, செப்.30-

மதுரை மாவட்டம் ஊமச்சிகுளம் நத்தம் 4 வழிச்சாலையில் உள்ள தனியார் மகாலில் தமிழ்நாடு மருந்து வணிகர்கள் சங்க செயற்குழு கூட்டம் நடைபெற இருந்தது. இதற்காக தமிழகம் முழுவதிலும் இருந்து மருந்து வணிகர்கள் ஏராளமானோர் வாகனங்களில் வந்து மகால் முன்பு குவிந்திருந்தனர். கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக திடீரென்று மாநிலத்தலைவர் ரமேஷ் தரப்பு மற்றும் மாநில செயலாளர் செல்வன் தரப்பினரிடையே கோஷ்டி மோதல் ஏற்பட்டது. இதனால் மண்டபம் முன்பு பரபரப்பாக காணப்பட்டது.இதனை அடுத்து மண்டபத்தில் காவல்துறையினர் குவிக்கப்பட்டதை தொடர்ந்து இரு தரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தை எட்டப்படாத நிலையில் நடைபெற இருந்த கூட்டம் ரத்து செய்யப்பட்டது. மாநில செயலாளர் செல்வன் தரப்பு கூறுகையில் இச்சங்கத்தில் 40000த்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இந்த சங்கத்தின் சார்பில் கூட்டம் நடைபெற இருந்தது ஆனால் மாநில தலைவர் ரமேஷ் வேண்டுமென்றே ஒரு சில சங்க உறுப்பினர்களை தன் பக்கம் வைத்துக்கொண்டு தகராறில் ஈடுபட்டனர். இதனால் பெரும் கோஸ்டி மோதல் ஏற்பட்டது. அதனால் கூட்டம் ரத்து செய்யப்பட்டது.இந்த சம்பவம் குறித்து மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார்கொடுக்கப்பட்டது என மாநில பொருளாளர் அன்பழகன் தெரிவித்தார்



## பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் தமிழக முதல்வரால் புதிய நூலக கட்டிடம் திறப்பு விழா

கோவை, செப்.30-

தமிழகம் முழுவதும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை துவக்கி வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் நிகழ்வின் ஒரு பகுதியாக கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி 7வது வார்டு ரங்கநாதபுரத்தில் புதிதாக கட்டப்பட்ட நூலக கட்டடத்தையும் திறந்து வைத்தார். நிகழ்வில் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் வெ.விஷ்வபிரகாஷ், மாவட்ட நூலக அலுவலர் ராஜேந்திரன், கவுன்சிலர் செல்வி. சௌந்தர்யா விஜயகுமார் மற்றும் பேரூராட்சி கவுன்சிலர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்தனர்.



## கோவை ஸ்ரீ நாராயண குரு கல்லூரி உடல் கல்வி துறை சார்பில் நடைபெற்ற மண்டல அளவிலான பெண்கள் கபடி போட்டி

கோவை, செப்.30-

கோவை க.க. சாவடியில் அமைந்துள்ள ஸ்ரீ நாராயண குரு கல்லூரியில் உடற்கல்வித் துறை சார்பாக “சி ஜோன்” பெண்களுக்கான மாபெரும் கபடி போட்டிகள் இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது.

கோவை பாரதியார் பல்கலைக்கழக இடைநிலைக் கல்லூரிகளுக்குட்பட்ட சி மண்டலம் சார்பில் 14 கல்லூரிகள் இப்போட்டியில் பங்குபெற்றது.

நேற்று முதல் துவங்கிய இப்போட்டியானது விறுவிறுப்புடன் நடைபெற்றது. தொடர்ந்து இன்று காலை முதல் அரை இறுதி போட்டி, இரண்டாம் அரை இறுதி போட்டி மற்றும் இறுதிப் போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டியினை ஸ்ரீ நாராயண குரு கல்வி அறக்கட்டளையின் செயலாளர் ஸ்ரீ ஹரி மற்றும் பாரதியார் பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குனர் அண்ணாதுரை ஆகியோர் துவக்கி வைத்து மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர். உடன் கல்லூரி முதல்வர் கல்பனா, உடற்கல்வி ஆசிரியர்கள் ஜெயபிரகாஷ் மற்றும் பெனிதா ஆகியோர் இருந்தனர்.

முதல் அரை இறுதி போட்டியில், ரத்தினம் கல்லூரி அணியும், இரண்டாம் அரை இறுதி போட்டியில் பொள்ளாச்சி என் ஜி எம் கல்லூரி அணியும், வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இறுதிப்போட்டியில் என் ஜி எம் பொள்ளாச்சி அணி 58 புள்ளிகளும் மற்றும் ரத்தினம் கல்லூரி அணி 35 புள்ளிகள் பெற்றது. இறுதியில் எம் ஜி எம் கல்லூரி அணி வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றியது.

வெற்றி பெற்ற அணிகளுக்கு சிறப்பு விருந்தினர்கள் கோப்பையை வழங்கினர். அதில் நான்காவது இடத்தில் அக்ஷயா கல்லூரி அணியும், மூன்றாவது இடத்தில் ஸ்ரீ தியாகராஜா கல்லூரி அணியும், இரண்டாவது இடத்தில் ரத்தினம் கல்லூரி அணியும் மற்றும் முதலிடத்தில் என் ஜி எம் பொள்ளாச்சி கல்லூரி அணியும் வெற்றிவாகை சூடியது.

இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள் மாணவ மாணவியர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## எதிர்வரும் 31.10.2025 க்குள் செலுத்தும் சொத்துவரிக்கு 5% சதவீதம் சிறப்பு சலுகை

மதுரை, செப்.30-

மதுரை மாநகராட்சி 2025-2026ம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டிற்கான சொத்து வரியினை எதிர்வரும் 31.10.2025 ஆம் தேதிக்குள் செலுத்தும் சொத்துவரி உரிமையாளர்களுக்கு சொத்து வரி தொகையில் 5% சதவீதம் சிறப்பு சலுகை (அதிகபட்சமாக ரூ.5000) வழங்கப்படும். எனவே மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி 31.10.2025 க்குள் தங்களது சொத்து வரியினை செலுத்தி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் பொதுமக்கள் வரிகளை செலுத்துவதற்கு வசதியாக (அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து) 2025 அக்டோபர் மாதம் முழுவதும் சனிக்கிழமைகளில் மாநகராட்சி வரிவசூல் மையங்கள் செயல்படும் எனவும், மேலும் www.tnurbanepay.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக ஆன்லைன் முறையிலும் வரிகளை செலுத்தி சிறப்பு சலுகையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு மதுரை மாநகராட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## காரைக்குடி மாநகராட்சி கோவிலூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கென “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற (30.09.2025) அன்று பட்டையர் கோவில் அருகில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்தில் நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, செப்.30-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள ”உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை தொடர்ந்து, காரைக்குடி மாநகராட்சி கோவிலூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கென “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற (30.09.2025) அன்று பட்டையர் கோவில் அருகில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேலும், ”உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி நிலவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161